# வரலாற்றுப் புகழ்பெற்ற திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்

[1] **தி.அல்பா கிரேஸ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்)
பதிவு எண்:19123094022021இ
தமிழாய்வு மையம் முஸ்லிம் கலைக்கல்லூரி திருவிதாங்கோடு.
கன்னியாகுமரி மாவட்டம்.
யடடியபசயஉந16பஅயடை.உழஅ
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
[2]**அபிஷேகப்பட்டி திருநெல்வேலி.**
நெறியாளர்: முனைவர்.த.மினி
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக்கல்லூரி திருவிதாங்கோடு.

**ஆய்வுச்சுருக்கம்**
ஆன்ம ஞானத்தையும்,தெய்வ பக்தியையும் வளர்ப்பதற்காகவே எழுந்தவையே கோயில்கள்.இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில், கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டாறு எனும் ஊரில் அமைந்துள்ள மிகப் பழமையான வைணவக் கோயில் திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலாகும் மக்களுடைய ஒவ்வொரு நாள் வாழ்வும் இறைவனோடு பின்னிப் பிணைந்திருக்கிறது. கடவுளிடம் உள்ள அச்சமும் முன்னோர்கள் வழக்கத்தை மீறாமல் நடந்து கொள்ளும் நம்பிக்கையும் சேர்ந்து வழிபாடு நடத்த தூண்டுகோலாயின..இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றிய இந்த தேவஸ்தானத்திற்கு பல நூற்றாண்டுகளின் வரலாறு கூற முடியும்.எத்தனை கலாச்சாரங்கள், ஆட்சிமாற்றங்கள்,இயற்கை மாற்றங்கள் போன்றவை கடந்து சென்றாலும் இக்கோயிலின் பெருமையானது புகழ்பெற்று விளங்குவதை இக்கட்டுரையானது சுட்டிக்காட்டுவதாய் அமைகிறது.கோயிலின் தலவரலாறு,கோயிலின் அமைப்பு மற்றும் கலைவடிவங்கள், கல்வெட்டுகள்,வழிபாட்டு முறைகள்,சிறப்புகள் குறித்து இக்கட்டுரையானது ஆராய்கிறது. மேலும் இக்கோயில் நம் முன்னோர்கள் ஆலயங்கள் அமைப்பதில் சொல்லற்கரிய அரும்பெரும் சாதனைகளை ஏற்படுத்தியவர்கள் என்பதை பறைசாற்றுவிதமாய் அமைவதும் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்**
ஆதிஅனந்தபுரம், தென்வைகுண்டம், திருவைகுண்டம், தென்பாரத ஸ்ரீரங்கம்

## முன்னுரை

வரலாற்று புகழ் பெற்ற திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் திருக்கோவில் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் திருவட்டாறு ஊரில் அமைந்துள்ள ஒரு பழமையான வைணவ கோவிலாகும். 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. மேலும் 13 மலைநாட்டு திருத்தலங்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. "மலையாள மொழியின் புகழ்பெற்ற கவிஞரால் திருவைகுண்டம் என்று புகழப்பட்ட இடமாகும். பாரத தேசத்தின் தென் பகுதியிலுள்ள வைணவ திருக்கோவில்களில் மிகவும் புகழ் பெற்ற தலமாகும்.

## திருவட்டார் பெயர்க்காரணம்

ஆதிகேசவ பெருமாள் கோவில் இருக்கும் இடமான திருவட்டார் பழமையும் பெருமையும் பெற்ற ஊராகும். இந்த ஊரின் நடுவில் பள்ளி கொண்டிருக்கும் ஆதிகேசவ பெருமாளின் திருவடிகளை வட்டமிட்டு பரளியாறு ஓடுவதால் இந்த ஊர் திருவட்டாறு எனும் பெயர் பெற்றது.மேலும் மாராமலையில் உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடும் பரளியாறு மற்றும் வடகிழக்கு பகுதியாக ஓடும் கோதையாறும் ஒன்று சேர்ந்து மீண்டும் ஒரே ஆறாக உருவெடுத்து மூவாற்றுமுகம் (மூன்று +ஆறு + முகம்) அரபிக்கடலில் கலக்கிறது. அத்தகைய, எழில் மிகு ஆலயங்களில் ஒன்று திருவட்டார் ஆதிகேசவப் பெருமாள் கோயில். திருவட்டாறில் குடிகொண்டு அருள் பாலித்து பலகோடி மக்களுக்கு பிறப்பின் நோக்கமான மோட்சம் கிடைக்க வழி வகுத்து வருகிறது. பரளியாற்றின் கரையில் அமைந்துள்ள இப்பகுதிக்கு பல பெயர்கள் உள்ளதாக 'திருவட்டார் சுகுமாரன் நாயர் குறிப்பிடுகிறார். (ஷேத்திர நகரி-பக்-22)

ஆதிஅனந்தபுரம், தென்வைகுண்டம், திருவைகுண்டம், தென்பாரத ஸ்ரீரங்கம் என பல பெயர்கள் தலபுராணங்களிலும், பக்திமார்க்க இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளதாக கூறுகிறார். மக்களால் ஆதிஅனந்தபுரம் என்று அழைக்கப்பட்டதாக வாய்மொழி செய்திகளும் கூறப்படுகிறது.

அனந்த சயனம் செய்யும் இடம் ஆனதால் இப்பெயர் சூட்டியிருக்கலாம் என்ற கருத்தும் தற்போது நிலவுகிறது.

**கோவிலின் அமைவிடம்**

திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவில் குமரி மாவட்டம் திருவட்டார் தாலுகாவில் நாகர்கோவில் திருவனந்தபுரம் பாதையில் மார்த்தாண்டம் என்ற இடத்திலிருந்து 8 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. திருவட்டாறு பேருந்து நிலையத்திலிருந்து நடந்து செல்லும் தொலைவிலேயே உள்ள இக்கோவிலுக்கு செல்லும் வழியை உணர்த்தும் அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டுள்ளது. திருவட்டார், செம்பகத்தோப்பு, தளியல் கிராமம், பிராமண அக்ரஹாரம் என்ற மூன்று பகுதிகள் அடங்கியதாகும். கடல் மட்டத்திலிருந்து சுமார் 85 மீட்டர் உயரத்தில் உள்ளது.

**திருவட்டாறு தலம் குறித்த தலபுராணம்**

பிரம்மா விஷ்ணுவைத் தரிசிக்க கஞ்ச ஸ்ரிங்கம் (காஞ்சனகிரி) என்ற இடத்தில் யாகம் செய்தார். யாககுண்டத்தில் தேஜஸீடன் அமர்ந்திருந்த பிரம்மாவிற்கு சிரசில் நிறைந்த அகங்காரத்தால் விஷ்ணுவை உதாசீனம் செய்ய எண்ணினார். விஷ்ணு பிரம்மாவிற்கு அறிவுபுகட்ட நினைத்து பிரம்மாவின் நாவில் மாயமாய் சரஸ்வதி அமர்ந்து மந்திரம் சொல்வதில் தவறு ஏற்பட செய்தார். அதனால் யாகச் சடங்குகள் தவறாயின. அந்த தவறின் விளைவாக யாகத்திலிருந்து சேகன் கேசி என்ற அரக்கர்கள் பிறந்ததாக கூறுகின்றனர்.கேசன் மற்றும் கேசிமரணமில்லா வரத்தை பிரம்மாவிடம் பெற்று மலை பர்வதத்தில் வந்து தங்கி, அங்கு வாழ்ந்த கவுடில்யன் என்ற வானர அரசனைக் கொன்று அந்த இடத்தை தமக்கு உரியதாக்கினர் அவ்வரக்கர்கள். கேசன் பிரம்மாவிடம் மேலும் பல வரங்கள் பெற்று தன்வலிமையை பெருக்கி தேவர்கள், முனிவர்களை துன்புறுத்தி மூவுலகிலும் தன் ஆட்சியை நிலை நிறுத்தினார்கள்.
கேசனின் தங்கை கேசி ஒருமுறை நாகலோகம் சென்றபோது இந்திரனைக் கண்டு அவனது அழகில் மயங்கி தன்னை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்த, இந்திரன் அதற்கு மறுக்க அவன் மேல்கோபம் கொண்டு அவனை பழிவாங்க நினைத்தாள். கேசி தன் சகோதரனிடம் பொய்யாக இந்திரன் தன்னை பலவந்தமாய கூட நினைத்ததாக கூற அவன் இந்திரனை கோபத்துடன் தேடி நாகலோகம் சென்றான். இந்திரன் கேசனுக்கு பயந்து சொர்க்கலோகம் சென்று ஒளிந்தான். பின்னர் இந்திரன் அகப்பட்டு ஏழு நாட்கள் போர் தொடர்ந்து நடந்தது. அப்போரில் இந்திரன் தோல்வியடைந்து யாரும் காண முடியாத இடத்தில் சென்று ஒளிந்தான். அதனால் வெகுண்ட கேசன் தேவலோகத்து அரம்யர்களை சிறைபிடித்தும் சூரிய சந்திரர்களை அவமானப்படுத்தியும் தன் கோபத்தை வெளிப்படுத்தினான்இவனது துன்புறுத்தலை தாங்க முடியாது முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒன்றாக கூடி விஷ்ணுவிடம் முறையிட விஷ்ணுவும் கேசனுடன் போரிட்டார். ஆனால் அவனைக் கொல்ல முடியவில்லை. அப்போது பராசக்தி பிரசன்னம் ஆகி கேசனை அழிக்க முடியாது அவன் மரணமற்றவன், ஆதிஷேசன் கேசனை சுற்றி வளைத்து அரண் கட்டட்டும நீ அதன் மேல் சயனிப்பாய் என்றாள். திருமாலும் அதே போன்று அரக்கர்களை வீழ்த்தி ஆதிகேசனின் அரவணைப்பில் அடங்குமாறு செய்து அதன் மேல் பள்ளி கொண்டான்.
ஆதிஷேசனின் அணையில் கேசன் அடங்கிவிட்டதைக் கண்ட கேசி கங்கை நதியைத் தியானித்தாள். கங்கை இரண்டு நதிகளாகப் பிரிந்து வந்து ஆதிகேசவனை அழிக்க வந்தாள். பூதேவி பரமன் இருந்த தலத்தை உயரும்படி அருள் செய்து இரண்டு நதிகளும் பரமன் சயனித்த தலத்தைச் சுற்றி வந்தன. கேசி பெருமாளின் பெருமை உணர்ந்து பணிந்தாள்.கேசன் எக்காலத்திலும் எழுந்து விடாமல் இருக்கவும் உலக நன்மைக்காகவும் பகவான் ஆதிஷேசன் மேல் அறிதுயில் புரிவதாக மக்கள் கூறுகின்றனர். பெருமாளை அழிக்க வந்த கங்கை நதியின் பிரிவுகளே கோதையாறாகவும் பரளியாறாகவும் ஆனது என்பது மக்களின் நம்பிக்கையாகும். இது ஒரு மரபு வழி வந்த கதையாகும்.

**கோவில் அமைப்பு**

"பொதுவாக பாரதத்தின் கோவில்களை அமைப்பு முறைப்படி நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்றாக பிரிக்கலாம்." **(மயிலை.சீனி. வேங்கடசாமி-நுண்கலைகள்.பக்.22).** நாகரம் என்பது வடஇந்தியக் கோவில் கட்டடக்கலையாகும். நர்மதை ஆற்றிற்கு வடக்குள்ளவை நாகரம் அமைப்பில் உள்ளன. தென் பாரதத்தில் சில பகுதிகளிலும், தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும் உள்ள ஆலயங்கள் வேசர முறையில் உள்ளன. திராவிடம் என்பது விந்தியமலைக்குத் தெற்கேயுள்ள கோவில் கட்டிடங்களாகும். திருவட்டார் கோவில் திராவிட அமைப்பு கொண்டு விளங்குகிறது.

**கருவறை**

சயனமூர்த்தி காணப்படும் கர்ப்பகிரகம் (கருவறை) தீர்க்கசதுரமாக உள்ளது. 11.60 மீட்டர் நீளம் மற்றும் 9.50 மிட்டர் அகலத்தில் இவ்வறை அமைக்கப்பட்டுள்ளது. தீர்க்கசதுரத்தில் கருவறை அமைக்க வேண்டும் என்பது வைணவ மரபாகும்.

ஶ்ரீகோவில் அதிஷ்டானம், உபானம், முப்பட்டகுமுதம், கண்டம், பட்டா, வேரி என்ற முறைப்படி அமைக்கப்பட்டுள்ளது. கருவறை வேதிக்கு கீழ் உள்ள சுவர் அமைப்பு கேரள அமைப்பில் உள்ளது. திருபாதகுமுதம் ஜெகதி போன்றவை வேறுசில அமைப்பில் பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் சுற்றுசுவரானது கனம் குறைந்த சிவப்பு கற்களால் அமைக்கப்பட்டுள்ளது.திருக்கோவிலை சுற்றியுள்ள மூன்று பக்கச்சுவர்கள் நடுவில் கந்தவார் என்று சொல்லப்படும் பொய் வாசல்கள் உள்ளன. பிற்கால சோழர்கள் காலத்தில் இது உருவாக்கப்பட்டிருக்கலாம் எனவும் கூறுகின்றனர். இங்கே தேவகோஷ்டம் (உள்ளறைகள்) இல்லை.குறிப்பாக புரட்டாசி மாதம் மூன்றாம் நாள் முதல் எட்டாம் நாள் வரை சூரியனின் அஸ்தமன கதிர்கள் சயமூர்த்தியின் திருவடியில் நேராக பதியும் விதத்தில் வாஸ்து சாஸ்திர அமைப்பு படி கருவறை அமைக்கப்பட்டுள்ளது.

**விமான அமைப்பு**

திருக்கோவிலின் விமானம் இரண்டு நிலை அமைப்பில் உள்ளது. மரத்தால் செய்யப்பட்டுள்ளது. சாய்ந்தகூரை திருக்கோவிலக்குள் உள்ளது. விமானத்திற்கு மேல் ஐந்து ஸ்தூபிகள் உள்ளன. செம்பினால் செய்யப்பட்டு தங்க முலாம் பூசப்பட்டுள்ளது. விமானம் முழுவதும் 5 சென்டிமீட்டர் தடியுள்ள மரப்பலகைகள் பதித்து அதன் மேல் செம்பு தகடு பதிய வைத்துள்ளது. கேரள வாஸ்து சாஸ்திர முறைப்படி அமைக்கப் பட்டுள்ளதாக கூறுகிறார்கள்.

**கோவில் கட்டிடக்கலை**

சேர, சோழ, பாண்டிய, சாளுக்கிய, ஹொய்சர்கள் காலத்தில் உருவான கோவில்கள் திராவிட அமைப்பைக் கொண்டதாகும். “தமிழ்நாட்டிலும் சேரநாட்டிலும் (மலையாளநாடு) பழங்காலத்தில் மரங்களினால் அமைக்கப்பட்ட கோவில்களும் இருந்தன.” **(மயிலை.சீனி.வேங்கடசாமி-நுண்கலைகள்.பக்-15)**திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலின் கட்டடக்கலை கேரள மாநிலத்தை சார்ந்த கோவில்களை போல் மரத்தால் தூண்கள், கதவுகள், மேற்கூரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதிகேசவ ஆலயம் மூன்று ஏக்கர் 27 சென்று பரப்பளவுடையது. கடல் மட்டத்திலிருந்து 90 மீட்டர் உயரமானதும் தரைமட்டத்திலிருந்து ஐந்து மீட்டர் உயரமானதுமாகும். இங்கே சயன வடிவில் பெருமாள் அருள்பாலிக்கிறார்.

திருவட்டார் ஆதிகேசவனை முதலில் புகழ்ந்து பாடிய பெருமைக்குரியவர் நம்மாழ்வார் ஆவார். இக்கோவில் குறித்து “வட்டாற்று கேசவன்” என மங்களாசாசனம் பாடியுள்ளதிலிருந்து, இந்த கோவில் குறைந்தபட்சம் 1200 ஆண்டுகள் பழமையானது என தெரிகிறது.

> **“வட்டாற்றனடி வணங்கி மாஞ்ஞாலப் பிறப்பறுப்பான்**
> **கேட்டாயே மட நெஞ்சே! கேசவன் எம்பெருமானை**
> **பாட்டாய பலபாடி பழவினைகள் பற்றறுத்து**

**நாட்டாரோடு ஒழிந்து நாணெளை நண்ணினுமே”(ஆறாம் திருவாய்மொழி-நம்மாழ்வார் கீர்த்தனம்.பக்.705)**

உண்டு உறங்கி சாதாரண வாழ்க்கை வாழும் நாட்டினரோடு இருப்பதை விடுத்து இறைவனின் பாடல்களை பலவாறாகப் பாடி பலவினைகள் பற்றறுத்து ஆதிகேசவன் என்னும் திருப்பெயருடன் எழுந்தருளியுள்ள நாரயணன் திருவடிகளை இவ்வட்டாற்றில் வணங்கி பிறப்பறுப்பேன் எனும் பொருளமைந்த பாடல் இவற்றுள் ஒன்றாகும். நம்மாழ்வார் பெருமாள் குறித்து நெகிழ்ந்துள்ளதை அறிய முடிகிறது.

**இறைவனை தரிசிக்கும் அரிய நிலை**

ஆதிகேசவன் இக்கோவிலில் தமது பாம்பு படுக்கையில் சயனித்தவாறு காட்சியளிக்கிறார். இந்த கோவிலில் உள்பிரகாரவாசல் மேற்குதரிசனமாக காணப்படுகிறது. ஆதிகேசவரின் தலை தென்திசையும் திருவடிகள் வடக்கு திசையிலுமாக சயன கோலத்தில் உள்ளது. ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்து இடது வாசல் வழியாக சயன மூர்த்தியின் திருவடியையும் வலது வாசல் வழியாக சிரோபாகமும், பிரசன்ன திருமுக தரிசனமும், நடுவாசல் வழியாக ஆதி அந்தமில்லை என்று சங்கல்பம் செய்கின்ற உடல் பகுதியையும் தரிசிக்க முடியும். குறிப்பாக சயனமூர்த்தியின் பாதாதிகேசம் ஒன்றாக பார்க்க யோகி மகான்களுக்கு கூட முடியாததாகும். அத்தகைய சிறப்பு பெற்ற கோவிலாகும்.சொர்க்க வாசல் ஏகாதசி அன்றுமட்டும் நாள் முழுவதும் மூன்று நடைகளும் முழுவதும் திறக்கும் பழக்கம் முன்காலம் தொட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது.

**கோவிலின் சிறப்புகள்**

108 வைணவ திருத்தலங்களுள் 76-வது ஆதிகேசவ பெருமாள் கோவிலாகும்.ஆதிகேசவனை படுக்கையாகக் கொண்டு அறிதுயிலில் ஆழ்ந்துள்ள பெருமாளின் திருமேனி 22அடி நீளமுடையது. கடுசர்க்கரை யோகம் (41 மூலிகைகளின் கலவை) மூலம் மூலவர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.1608 சாளக்கிராமங்களால் உருவாக்கப்பட்டு திருவுடல் கடுச் சர்க்கரை யோக கூட்டுக்கொண்டு கவசம் செய்யப்பட்டுள்ளது.சயன வடிவத்திலுள்ள கருவறை சிற்பங்கள் கல்லில் செதுக்கக்கூடாது என்று சாஸ்திரவிதிகள் உள்ளன.இக்கோவிலில் தண்ணீரில் ஆதிகேசவன் படுத்திருப்பதாகவும் அதன்மேல் பெருமாள் பள்ளி கொண்டிருப்பது போன்று அமைந்திருப்பது சிறப்பாக கருதப்படுகிறது.திருத்தலை திருக்கரம் திருப்பாதம் என்று மூன்று வாயில்கள் வழியாக பெருமாளை தரிசிக்கும் வகையில் அமைந்துள்ளது. திருச்சி ஸ்ரீரங்கம் திருவனந்தபுர பத்மநாபசுவாமி கோவில்களுக்கு முந்தைய கோவிலாகும்.ஆதியில் ஆதிதாமபுரம் என்று இந்த திருத்தலம் அழைக்கப்பட்டது. நம்மாழ்வாரால் மங்களாசாசனம் பாடப்பட்ட மிகப் பழமையான கோவில்.108 திவ்ய தேசக் கோவில்களில் பள்ளி கொண்ட நிலையில் பெருமாள் மேற்கு நோக்கி காட்சிதரும் ஒரே திருத்தலம்.திருவட்டாறு கோவிலின் மேற்கு வாசல் திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் கிழக்குவாசல், குருவாயுர் கிருஷ்ணன் கோவிலின் கிழக்கு வாசல் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் அமைந்துள்ளன.இக்கோவில் திருவைகுண்டம் என்று புகழப்படுகிறது.

**திருவட்டார் ஆலயத்தின் கலை வடிவங்கள்**

நுண்கலைகளில் சிற்பக்கலையும் ஒன்றாகும். கோவில் கட்டடத்தின் தரை சுவர் தூண்கள் விமானம் கோபுரம் முதலான எல்லா இடங்களிலும் சிற்ப உருவங்களைப் பார்க்க முடியும். சிற்ப உருவங்கள் அமையப்பெறாத கோவில்கள் இல்லை எனலாம். “தெய்வ வழிபாட்டுக்குரிய கோவில்களை நம்முடைய முன்னோர் கலைக் கூடங்களாகவும் அமைத்தார்கள”. **(மயிலை.சீனி.வேங்கடசாமி.பக்.24)** திருவட்டார் ஆலயத்தின் சிற்பங்கள் மற்றும் சித்திர வேலைப்பாட்டு கலை வடிவங்கள் பற்றி கூறும்போது எடுத்துரைக்க வேண்டிய பல விஷயங்கள் உள்ளன. பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் இந்த கிராமத்தின் உயிர் துடிப்பினை இங்குள்ள சிற்பங்களில் காண முடியும்.நமது சமூகத்தில் வாழ்ந்து மறைந்த அனைத்து துறைகளிலும் உள்ளவர்கள், கிராமவாசிகள் பக்கசுவர்களிலும் கல்தூண்களிலும் வரிசையாக நின்று நம்மிடம் பேசுவது போன்று தோன்றும். அதாவது ஆண்கள், பெண்கள், வேலையாட்கள், சுமட்டு தொழிலாளிகள், புரோகிதர்கள், மேலாளர்கள், கீழாளர்கள், அரசர்கள், ராணிமார்கள், தேவர்கள், அப்ஸரசுகள், கந்தர்வர்கள், அரக்கர்கள், முனிவர்கள், யோகிகள், வாசல் காவலர்கள், ஆலய காப்பாளர்கள், நவக்கிரகங்கள், அஷ்டதிக் பாலகர்கள் ஆலய வடிவமைப்புக்கு பயன்படுத்தப்பட்ட அளவு கருவிகள், தந்திர சக்கரங்கள் போன்றவையும் கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது.

மேலும் உடலுக்கு தொடர்புடைய ஷடாநாரங்களை கூறுகின்ற சிற்பங்கள் காமரசத்துடன் வடிவமைக்கப்பட்ட ரதி கிரீடை சிற்பங்களும் உள்ளன. காமசாஸ்திர ரகசியங்கள் அடங்கிய ரதி மன்மத சிலைகள், பிறந்த மேனியுடன் நிற்கின்ற மங்கையர்கள், வாலிப தோற்றங்கள் உடைய சிற்பக் கலைகளை இங்கே பார்க்க முடியும். நாகரீகம் மற்றும் அநாகரிகமான தோற்றங்களை கலை அழகில் காட்டுகின்ற சிலைகளும் உள்ளன. பறவைகள், விலங்குகள், சர்பங்கள், புராண மனிதர்கள், போர்க்களங்கள், திருவிழா கோலங்கள் போன்ற நிகழ்ச்சிகளும் தத்ரூபமாக செதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடதக்கதாகும்.

**திருவட்டார் கோவில் கல்வெட்டுகள்**

கல்வெட்டுகள் தமிழகத்தில் ஏறத்தாழ கிமு.2-ம் நூற்றாண்டு முதல் காணப்படுகின்றன. திருவட்டார் கோவிலில் இருந்து 47 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. கல்வெட்டுகள் வடமொழி எழுத்திலும் மீதமுள்ளவை தமிழ், மலையாளம் கலந்த எழுத்துக்களிலும் உள்ளன. 47 கல்வெட்டுகளில் ஸ்ரீவீரரவிவர்மர்மன் (18 ஆம் நூற்றாண்டு) போன்ற வேணாட்டு அரசர்களின் பெயர்கள் தெளிவாக செதுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, இந்த கோவிலின் கல்வெட்டுகள் யாவும் கோவிலின் புதிய சீரமைப்பு பணிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றை பற்றிய விவரங்களை நமக்கு சுட்டிக்காட்டும் விதமாக அமைந்துள்ளது.கல்வெட்டுகள் பண்டைய மக்களின் வாழ்வை பறைசாற்றும் நினைவுச் சின்னங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன.ஆதிகேசவ பெருமாள் ஆலயத்தின் திருப்பணிகள் அதிகமாக நடைபெற்றிருப்பது வேணாட்டு அரசன் வீரரவிவர்மன் காலத்தில் தான் என்பதை கல்வெட்டுகள் மூலம் அறிந்து கொள்ள முடியும்.வீரரவிவர்மன் இந்த ஆலய திருப்பணியை கலிவருடம் மிதுன மாதம் 26 ஆம் நாள் சனிக்கிழமை சப்தமி திதியில், அத்தம் நட்சத்திரத்தில்

தொடங்கியதாக கல்வெட்டு கூறுகிறது. (4704ME-779, MD-1604). இவர் செய்த திருப்பணிகளாவன

1. நான்கு திருமாளிகைகளில் தளம் போட்டு சுவர் எழுப்புதல்
2. திருமடப்பள்ளி
3. நீரறை
4. விளக்கு மாடம்
5. திரு பலிக்கல் மண்டபம்
6. உள்பிரகார தளங்கள்
7. ஒற்றைக்கல் மண்டபம்
8. ஒற்றைக்கல் மண்டபத்தின் துவார பாலகர் போன்ற விவரங்களை கல்வெட்டுகள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது

இக்கோவிலில் உள்ள கொடிக்கம்பத்தில் தமிழக கல்வெட்டு ஒன்று உள்ளது. அது மட்டுமல்லாது அரசர்களின் ஆட்சிகாலமும். அக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

1. குலசேகர பெருமாள் - கி.பி. 644-659
2. வீரமார்த்தாண்டவர்மா-கி.பி. 510-519
3. வீரகேரள வர்மா – கி.பி. 519-550
4. செம்பலாத்த வர்மா-கி.பி. 612-645
5. உன்னி கேரள வர்மா – கி.பி 734-753

தென்தமிழக கல்வெட்டுகள் மூலமாக தமிழக மன்னர்களின் ஆட்சி முறை மற்றும் மக்களின் வாழ்க்கை முறை மற்றும் சமயம் சார்ந்த உணர்வுகளின் வெளிப்பாட்டையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**தினசரி பூஜைகள் மாத விஷேஷங்கள்**

திருக் கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள மூர்த்திகளுக்கு சில ஆசாரங்கள் முறையாக கடைபிடித்து செய்யும் வழிபாடுகளுக்கு பூஜை என்று கூறுகிறோம். எந்த கோவிலாக இருந்தாலும் பிரதிஷ்டை செய்யும்போது வகுக்கப்படட் ஆசாரங்களும் பூஜை முறைகளும் தவறாமல் செய்து வந்தால் மட்டுமே தேவ சைதன்யம் நிலைத்திருக்கும் என்பது உண்மை.பூஜை என பொதுவாக அழைக்கப்படும் கிரியை, கோவிலில்களின் மரபு தன்மைகளுக்கு ஏற்ப நிகழும். பொதுவாக பூஜை முறைகள் இருந்தாலும் ஒவ்வொரு கோவிலுக்கும் சில தனிப்பட்ட ஆசார பாரம்பரிய விதிமுறைகள் இருக்கும்.

“பொதுவாக கோவில் பூஜை முறைகளை நாள், விசேஷம், நட்சத்திர விசேஷம், திதி விசேஷம், மாத விசேஷம், ஆட்ட விசேஷம் என வரையறுப்பதாக தென்குமரி கோவில்கள் என்ற புத்தகத்தில் அ.கா. பெருமாள் கூறுகிறார்.” இவற்றை தின பூஜை, சிறப்பு பூஜை, விழாக்கள் என பொதுவாக கூறலாம்.

- மலையாள தாந்திரீக முறையில் வைணவ கோவில்களில் ஞாயிறு, வியாழன் கிழமைகளில் ஏகாதசி, துவாதசி ததிகள் முக்கியமானதாக கருதப்படுகிறது. சனிக்கிழமை சாஸ்தாவிற்கு முக்கியமானதாக கருதப்படுகிறது.
- ஆனால் தமிழ் ஆகம விதிமுறைப்படி தமிழ்நாட்டு பெருமாள் கோவில்களில் சனிக்கிழமைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். முக்கியமாக புராட்டாசி சனிக்கிழமைகளுக்கு திருவட்டார் ஆதிகேசவ பெருமாள் கோவிலில் இன்றும் மலையாள தாந்திரீக முறையில் பூஜை நடத்தப்படுகிறது.
- இந்த தேவ சன்னதியின் பூஜைகள், நாள் விசேஷங்கள், நட்சத்திர விசேஷங்கள், ததி விசேஷங்கள், மாத விசேஷங்கள், ஆட்ட விசேஷங்கள், என ஐந்தாக வகுத்துள்ளனர்.
- அமாவாசை, பௌர்ணமி தினங்களில் தித பூஜைகள் செய்யப்படுகிறது.
- ஒரே மாதத்தில் வரும் அஸ்வதி, பூராடம், அவிட்டம்,திருவோணம், ரோகிணி நட்சத்திர நாட்களில் விசேஷ பூஜைகள் நடத்தப்படுகிறது.
- மற்ற திருக்கோவில்கள் பூஜைகளிலிருந்து மிகவும் மாறுபட்ட முறையில் இங்கு திசேலி பூஜைகள் நடத்தப்படுகிறது.

**திருவிழாக்கள் மற்றும் பிரசாதங்கள்**

மனித சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்து இருந்தபோதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாவாகும். திருவிழாக்கள் அனைத்தும் கோவிலடன் பின்னிப்பிணைந்துள்ளன. கோவில் என்றாலே திருவிழா, திருவிழா என்றாலே கோவில் விழாக்கள். சமயத்தின் கூறாக மட்டுமின்றி கலைகளின் வளர்ப்பு பண்ணையாகவும் திகழ்வதாக

நாட்டுப்புறவியல் ஆய்வு என்ற புத்தகத்தில் சு.சக்திவேல் குறிப்பிடுகிறார். மக்களின் பண்பாடும் பழக்க வழக்கங்களும் நாகரீகமும் திருவிழாக்கள் வாயிலாக வெளிப்படுகின்றன.
ஆவணித்திருவோணம், ஐப்பசி பிரமோற்சவம், புரட்டாசி சனி, வைகுண்ட ஏகாதசி, ஆறாட்டு திருவிழாக்களும் கொண்டாடப்படுகிறது.திருவட்டார் கோவிலில் வைகுண்ட ஏகாதசி மிகவும் விமரிசையாக கொண்டாடப்படும் ஒரு திருவிழாவாகும்.இந்த கோவிலில் வழங்கப்படும் பிரசாதங்களான பால் பாயாசம், (பால் அமுது) அவல் மற்றும் அப்பம் மிகவும் பெயர் பெற்றதாகும்.

**திறக்கும் நேரம்**
ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் பக்தர்கள் இறைவனை தரிசிக்க தினமும் அதிகாலை 5 மணிக்கு திருநடை திறக்கப்பட்டு நண்பகல் 12 மணி வரையும், மீண்டும் மாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு இரவு 8 மணி வரைக்கும் கோயில் திறந்திருக்கும்.

**நேர்த்திக்கடன்**
பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனம் செய்து வழிபடுதல் நேர்த்திக்கடனாக பின்பற்றப்பட்டு வருகிறது.

**மக்களின் நம்பிக்கை**
**“**அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன. நம்பிக்கைகள் காலம் காலமாக ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு பரவி வருகிறது.” **(நாட்டுப்புறவியல்-சு.சக்திவேல்பக்.74)** கேட்டதையெல்லாம் கொடுக்கும் பெருமாள் என்ற நம்பிக்கை மக்களிடம் பரவலாக காணப்படுகிறது.மனக்கவலை போக்கும் பெருமாள் எனவும் மக்கள் கூறுகின்றனர்.

**முடிவுரை**

திருவட்டாறில் குடிகொண்டு அருள்பாவித்து பல கோடி மக்களுக்கு பிறப்பின் நோக்கமான மோட்சம் கிடைக்க வழி வகுத்து வரும் ஆதிகேசவ பெருமாளின் வரலாற்றை, அதாவது உண்மையான தெளிவுகள் மற்றும் சான்றுகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. 2500 வருடங்களுக்கு மேல் பழக்கமுள்ள கோவில் நகரத்தின் பழமையான வரலாற்றை அறிந்துகொள்ள முடிகிறது.